00009

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித் துறை

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் - 2024/2025

இறுதிப் பரீட்சை

**SNP**8341 விசேட தேவைகள்சார் கல்வித் தத்துவம்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 19.07.2025 நேரம் : பி.ப.01.30- பி.ப.04.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி -I

1. உங்கள் சொந்த மொழியைப் பயன்படுத்தி "கல்வி" என்ற சொல்லை வரையறுத்து, 21 ஆம் நூற்றாண்டில் அதன் பொருத்தத்தை ஆராய்க.
2. யுனெஸ்கோ அறிமுகப்படுத்திய கல்வியின் நான்கு (04) தூண்களை பட்டியலிட்டு விளக்குக.
3. கல்வி குறித்து மகாத்மா காந்தி முன்வைத்த கருத்துக்களை சுருக்கமாக விளக்குக.
4. அதீத பௌதீகவியல் (மெட்டாபிசிக்ஸ்) கருத்துக்கள் கல்வி சிந்தனையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளக்குக.
5. உள்ளடங்கல் கல்வியின் முக்கிய பண்புகளை அடையாளம் காண்க.
6. "கல்வி" மற்றும் "பயிற்சி" ஆகியவற்றுக்கு இடையே பொருத்தமான எடுத்துக்காட்டுக்களை பயன்படுத்தி வேறுபடுத்துக.
7. கல்வித் தத்துவத்திற்கு ஜான் டீவியின் ஐந்து (05) முக்கிய பங்களிப்புகளைக் குறிப்பிடுக.
8. கல்வியின் தத்துவம் ஆசிரியர்களால் வகுப்பறை முடிவெடுப்பதில் எவ்வாறு வழிகாட்ட முடியும் என்பதை விவரிக்க. ஐந்து (05) காரணங்களைத் தருக.

**(05x08=** 40 புள்ளிகள்)

## பகுதி II

9.

i. "விசேட கல்வி" என்ற எண்ணக்கருவை வரையறுக்க.

(02 புள்ளிகள்)

ii. பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் பல்வேறு விசேட கல்வி கட்டமைப்புகளை விவரிக்கவும்.

(08 புள்ளிகள்)

iii. இலங்கைப் பாடசாலைகளில் உள்ளடங்கல் கல்வியை செயல்படுத்துவதில் **ஐந்து** (05) சவால்களை விமர்சன ரீதியாக மதிப்பிடவும்.

(10 புள்ளிகள்)

10.

i. "தத்துவம்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன.

(04 புள்ளிகள்)

ii. பொதுத் தத்துவத்திற்கும் கல்வித் தத்துவத்திற்கும் இடையிலான உறவை விளக்குங்கள்

(06 புள்ளிகள்)

iii. கல்வித் தத்துவ அறிவு ஒரு ஆசிரியரின் தொழில்வாண்மைத்துவ நடைமுறையை எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதை கணிப்பிடுக.

(10 புள்ளிகள்)

11.

i. உள்ளடங்கல் கல்வியின் **ஐந்து** (05) வழிகாட்டும் கொள்கைகளைப் பட்டியலிடுக.

(03 புள்ளிகள்)

ii. வகுப்பறை நடைமுறையில் இக் கொள்கைகள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. இந்த கொள்கைகளைப் பயன்படுத்தி ஒரு வகுப்பறையை மேலும் உள்ளடங்கியதாக மாற்றுவதற்கான திட்டத்தை முன்மொழிக.

(10 புள்ளிகள்)

12.

i. கல்விக் கோட்பாட்டிற்கு பிளேட்டோ செய்த இரண்டு (02) முக்கிய பங்களிப்புகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்))

ii. இந்தப் பங்களிப்புகள் சமகால கல்விக்கு எவ்வாறு பொருத்தமானவை என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகளுக்கு கற்பிப்பதில் பிளேட்டோவின் கல்விக் கருத்துக்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி ஆராய்க.

(10 புள்ளிகள்)

13.

i. ஒரு நல்ல உள்ளடங்கல் ஆசிரியருக்கு இருக்கவேண்டிய ஐந்து (05) முக்கியமான குணங்களை பட்டியலிடுங்கள்.

(04 புள்ளிகள்)

ii. மாணவர்களின் நடத்தை மற்றும் மனப்பான்மைக்கு ஒரு ஆசிரியர் எவ்வாறு உதவ முடியும் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. உங்கள் கருத்துப்படி இலங்கையில் 21 ஆம் நூற்றாண்டில் கல்வியின் முக்கிய நோக்கங்கள் என்னவாக இருக்க வேண்டும்? உங்கள் பதிலை ஆதரிக்க காரணங்கள் மற்றும் எடுத்துக்காட்டுகளைத் தருக.

(10 புள்ளிகள்)

14.

i. இன்றைய உலகில் கல்வியின் முக்கிய சவால்களை விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. ஒரே வகுப்பறையில் வெவ்வேறு கற்றல் தேவைகளைக்கொண்ட மாணவர்களுக்கு ஆசிரியர்கள் எவ்வாறு ஆதரவளிக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. “கல்வி ஒரு நபர் அறிவாளியாக மட்டுமல்லாது நல்ல மனிதராகவும் மாற உதவ வேண்டும்”
இந்தக் கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உங்கள் பார்வையை ஆதரிக்க காரணங்களையும் எடுத்துக்காட்டுக்களைத் தருக

(10 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது